21st October 1971]

காவல் நிலைய எல்லைக்குள் ஒரு வீட்டில் கொள்ளையடிக்க முயன்றதைத் தவிர, கன்னியாகுமரி மாவட்டத்தில் வன்முறைச் செயல்கள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

(உ) இந்நிலையை அரசு தொடர்ந்தும் கூர்ந்தும் கவனித்து வருகின்றது. உரிய இடங்களில் ஒல்லும் எல்லா நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து எடுத்து வந்துள்ளது (வரும்).

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் நக்சல் பாரிகளின் நடவடிக்கை எந்த நிலையில் இருக்கின்றது என்பதையும் அண்மையில் திருச்சியில் குண்டு வைப்பு சம்பவத்திற்குப் பிறகு நக்சல்பாரிகளின் நடவடிக்கை அதிகரித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதைப்பற்றித் திட்டவட்டமாக எதுவும் நான் கூறுவதற்கில்லை. திருச்சி சம்பவத்திற்குப் பிறகு அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதையும் அளவிட்டுக் கூறுவதற்கு இயலாது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, நக்சல்பாரி என்பவர்களுக்கும் சாதாரணமாக கொள்ளை, கொலை ஆகிய செயல்களில் ஈடுபடுகிறவர்களுக்கும் இடையே இதுவரையில் எந்தவிதமான வேறுபாட்டை அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கொள்ளை, கொலை போன்ற காரியங்களில் ஈடுபடுகின்ற குற்றவாளிகள் நீண்டநெடுங்காலமாகவே அவைகளில் ஈடுபட்டு அதற்கான தண்டனையையும் அனுபவித்து வருகிறார்கள். நக்சலைட் என்று அழைக்கப்படுகிறவர்கள் ஒரு குறிக்கோள், கொள்கையை வன்முறை மூலமாக நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் திட்டமிட்டு அந்தக் காரியங்களைச் செய்கிறார்கள். இதுதான் இப்போது இருக்கிற வேறுபாடாகும்.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, திருச்சி குண்டு சம்பவம் நக்சலைட்டினால்தான் ஏற்பட்டது என்பது தென்பட்டிருக்கிறதா? அரசாங்கம் அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றிய புலன் விசாரணை முடிவடைந்து நிரூபிக்கப்படவில்லை.

Chief Secretary.

*2. *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state

(*a*) whether it is a fact that the Government of India have upgraded the post of Chief Secretaries in States;

(*b*) if so, whether the First Member, Board of Revenue whose post was made equivalent to the post of Chief Secretary in our State will also receive the benefit; and

(*c*) if not, what will be his ranking?

தலைமைச் செயலாளர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலங்களிலுள்ள தலைமைச் செயலாளர்கள் பதவியை இந்திய அரசு உயர்த்தியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், நமது மாநிலத்தில் தலைமைச் செயலாளர் பதவிக்குச் சமமானதாகச் செய்யப்பட்ட வருவாய்த் துறை வாரிய முதல் உறுப்பினர் பதவியும் அந்நலனைப் பெற்றிடுமா?

(உ) இல்லையெனில், அவரது பதவி வரிசை நிலை என்னவாக இருக்கும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வருவாய்த் துறை வாரிய முதல் உறுப்பினர் பதவித் தரத்தை உயர்த்துவதைப் பொறுத்த வரையில், அது தற்போது இந்திய அரசின் ஆய்வில் உள்ளது.

(உ) இக்கேள்வி இப்போது எழுவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர் பதவியை இந்திய அரசு உயர்த்துவதற்கான காரணம் என்ன என்பதையும் அப்படி உயர்த்தும்போது மாநிலங்களில் கூட்டுச் செயலாளர்கள் பதவி ஒன்றிரண்டு அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு குறிப்பிட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு பதவிகளை—அடிஷனல் செகரட்டரி பதவிகளை ரூ. 3,000 ஊதிய விகிதத்தில் ஏற்படுத்த மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளது. இதற்கான உத்தரவு இன்னும் வரவில்லை. ஆனால் அந்தக் கோரிக்கை மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. மாநிலங்களில் பணியாற்றுகிற தலைமைச் செயலாளர்களுக்கு அவர்களது வேலைப் பொறுப்பைக் கணக்கில் கொண்டு மத்திய அரசுச் செயலாளர்களுக்கு அளிக்கும் ஊதியம் அளிக்கப்படவேண்டுமென்ற காரணத்தையொட்டி இந்த அளவில் உயர்த்தப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் கூட்டுச் செயலாளர் பதவியும் வருவாய் வாரிய முதல் உறுப்பினர் பதவியும் மத்திய அரசின் ஆய்வில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்போது அந்தப் பதவியின் தரம் என்ன? மாநில அரசு எந்தத் தரத்தில் அதை வைத்திருக்கிறது? திட்டக் கமிஷன் உதவித் தலைவர் பதவி வரிசை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே சீஃப் செகரட்டரி ரூ. 3,000 சம்பளம் பெறுபவராக இருந்தார். ரெவின்யூ போர்டு முதல் மெம்பருக்கும் அதே சம்பளம் அளிக்கப்பட்டது. இரண்டு பதவியும் ஒன்றுக்கொன்று சம அந்தஸ்துள்ள பதவியாக வைக்கப்பட்டது. ஏற்கனவே கூறியதைப் போல, சீஃப் செக்ரட்டரியின் தரம் உயர்த்தப்பட்ட பிறகு, முதல் மெம்பரின் பதவியும் அந்த அளவிற்கு உயர்த்தப்பட்டு அந்த அளவுக்கு சம்பளம் தரவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசிற்கு எழுதியிருக்கிறது. அது தான் ஆய்வில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தற்போது ரெவின்யூ போர்டு முதல் மெம்பர் தரத்தில்தான் அந்தப் பதவி வைக்கப்பட்டிருக்கிறது.